<u>பத்திரிகை செய்தி</u> **14.7.2006**

## தமிழகத் தொழிலாளர்களை காட்டுமிராண்டித்தனமாக நடத்தினார் மலேசிய கோழிப் பண்ணை முதலாளி உடம்பிலும் சூடு வைத்தார், மர்ம உறுப்பிலும் சூடு வைத்தார் நடவடிக்கை எடுக்க பினாங்கு பயனீட்டாளர் சங்கம் தயார்

---

மலேசியாவுக்கு வேலை தேடி வருகின்ற தமிழ்நாட்டுத் தொழிலாளர்கள் மலேசியாவில் தாங்கள் வேலை செய்யப்போகும் நிறுவனத்தைப் பற்றிய முழு விபரத்தை தெரிந்து வைத்துக்கொண்ட பிறகே மலேசியாவுக்கு வர முடிவு செய்ய வேண்டும். இல்லையென்றால் ஒரு சிலரின் காட்டுமிராண்டித்தனமான செயலால் தமிழ்நாட்டுத் தொழிலாளர்கள் அடிமைகளாக நடத்தப்படக்கூடிய சூழ்நிலை ஏற்படலாம் என மலேசியாவில் இயங்கும் பினாங்கு பயனீட்டாளர் சங்கம் எச்சரிக்கை விடுத்தது.

கடந்த செவ்வாய்க்கிழமை தமிழ்நாட்டின் கடலூரைச் சேர்ந்த ஆர்.செல்வம் மற்றும் பெரம்பூரைச் சேர்ந்த ஆர்.ரெங்கராஜ் ஆகிய இருவருக்கும் இழைக்கப்பட்ட மிகக் கொடூரமான சித்திரவதை வேறு எவருக்கும் ஏற்படக்கூடாது என பி.ப.சங்கத்தின் கல்வி இயக்குநர் என்.வி.சுப்பாராவ் கூறினார்.

தமிழ்நாட்டுத் தொழிலாளியான ஆர் செல்வத்திற்கு உடல் முழுவதிலும் தீக்காயங்களை ஏற்படுத்தியிருக்கின்றார் அவர் வேலை செய்த கோழிப்பண்ணையின் முதலாளி. அதேப்போல் திரு ரெங்கராஜ் என்ற தமிழ்நாட்டுப் பிரஜைக்கு அவரது மர்ம உறுப்பில் ஒரு நீண்ட குச்சியில் துணியைக் கட்டி அதில் நெருப்பு வைத்து சூடு காட்டியிருக்கின்றார்.

இதனால் அவர் மிகக் கடுமையான சித்திரவதைக்கு ஆளாகியிருக்கின்றார். மன உளைச்சல், தூக்கமின்மை, பய உணர்வு ஆகியவை அவருக்கு ஏற்பட்டிருப்பதாக சுப்பாராவ் மேலும் கூறினார்.

மலேசியாவின் பூச்சோங் என்ற இடத்தில் அமைந்திருக்கும் ஒரு கோழிப்பண்ணையில் இந்த இரண்டு இந்தியத் தொழிலாளர்கள் வேலை செய்து வந்தனர்.

தங்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய சம்பளத்தை கேட்டதற்காக அவர்கள் இவ்வாறு கொடுமைப்படுத்தப்பட்டிருக்கின்றனர். சிலரின் பண உதவியால் அவர்கள் அக்கோழிப்பண்ணையிலிருந்து தப்பித்து கோலாலம்பூரில் இருக்கின்ற இந்தியத் தூதரகத்தில் அடைக்கலம் கோரியிருந்ததாக சுப்பாராவ் கூறினார்.

மலேசியாவில் தமிழ்நாட்டிலிருந்து வருகின்ற தொழிலாளர்கள் பல்வேறு பிரச்னைகளுக்கு ஆளாகிக்கொண்டு வருவதாக அவர் கூறினார். அவற்றில் வாக்குறுதி வழங்கியது போல் ஊதியம் கொடுக்காதது, வாக்குறுதி அளித்த தொழிலுக்கும் பிறகு, அவர்களை செய்யச்

சொல்லிக் கட்டாயப்படுத்தும் தொழிலுக்கும் உள்ள வேறுபாடு, 8 மணி நேர வேலைக்குப் பதில் 12 மணி நேர வேலை, செய்த வேலைக்கு பல மாதங்களாக சம்பளம் கொடுக்காதது, ஒரே அறையில் அளவுக்கு அதிகமானோரைத் தங்க வைப்பது, சத்துக் குறைவான உணவை வழங்குதல், கடப்பிதழை தன் வசம் வைத்துக்கொண்டு மிரட்டுவது, இறுதியாக சம்பளம் கேட்டால் குண்டர் கும்பலை வைத்து மிரட்டுவது, அடிப்பது போன்ற சம்பவங்கள் அதிகரித்துக்கொண்டு வருவதாக சுப்பாராவ் கூறினார்.

தமிழ்நாட்டிலிருந்து மலேசியாவுக்கு வேலை செய்ய வர விரும்புகின்ற தமிழகப் பிரஜைகள் தங்களுக்கு வேலை கொடுக்கவிருக்கும் நிறுவனங்கள் உண்மையிலேயே செயல்படுகின்றதா, அப்படிச் செயல்பட்டால் அவை சட்டத்திற்கு உட்பட்ட நிறுவனங்களா போன்ற விபரங்களை நன்கு ஆராய்ந்து தெரிந்துகொண்ட பின்பே மலேசியாவுக்கு வர வேண்டும் என சுப்பாராவ் அவர்களுக்கு ஆலோசனை கூறினார்.

நூற்றுக்கணக்கான தமிழகத் தொழிலாளர்கள் கோலாலம்பூரின் விமான நிலையத்திலேயே என்ன செய்வது என்று அறியாது தவித்துக்கொண்டிருக்கின்ற நிலைமையும் அதிகரித்துக்கொண்டு வருவதாகவும் அவர் கூறினார். தங்களை முறையாக அழைத்துச் செல்ல வேண்டிய முகவர்கள் காணாமல் போய்விடுகின்றனர். இதனால் யாரை சந்திப்பது, எவரிடம் செல்வது என்ற விபரங்களைக் கூட இவர்கள் தெரிந்து வைத்திருப்பதில்லை என்றும் அவர் கூறினார்.

மலேசியாவில் தமிழகத் தொழிலாளர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்னை தொட்டு பினாங்கு பயனீட்டாளர் சங்கம் அவ்வப்பொழுது நடவடிக்கை எடுத்து வருவதாகவும் என்.வி.சுப்பாராவ் கூறினார்.

என்.வி.சுப்பாராவ்

email : subba_cap@hotmail.com

இச்செய்திக்கான 4 போட்டோக்கள் மின்அஞ்சல் வழி அனுப்பப்பட்டிருக்கின்றன.